**வகுப்பு : 12** **ஒரு மதிப்பெண் தேர்வு - 2024-25**

# புவியியல்

மொத்த மதிப்பெண்கள் : 100

1. பின்வருவனவற்றுள் எது / எவை மிதமான மக்கள் அடர்த்தி கொண்ட பகுதி / பகுதிகள். கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்தி விடையளி.
   i) அமெரிக்க ஐக்கிய நாட்டின் மத்தியப் பகுதி, வெப்பமண்டல மேற்கு ஆப்பிரிக்கா, ரஷியாவின் மேற்குப் பகுதி மற்றும் கிழக்கு ஐரோப்பா
   ii) இந்தியாவின் தக்காண பீடபூமி, மெக்சிகோ பீடபூமியின் தெற்குப் பகுதி
   iii) வடகிழக்கு பிரேசில் மற்றும் மத்திய சிலி, வெப்பமண்டல மேற்கு ஆப்பிரிக்கா, ரஷியாவின் மேற்குப் பகுதி மற்றும் கிழக்கு ஐரோப்பா
   iv) தென் அமெரிக்காவின் அமேசான் பகுதி, மற்றும் ஆப்பிரிக்காவின் காங்கோ, கனடாவின் ஆர்டிக் பகுதி மற்றும் துருவப்பகுதிகள்

   அ) ii) மற்றும் iii) மட்டும் ஆ) i) மற்றும் ii) மட்டும்
   இ) i), ii) மற்றும் iii) மட்டும் ஈ) ii), iii) மற்றும் iv) மட்டும்

2. ------ என்பது மக்கள் தொகைப் புள்ளிவிவரப் படிப்பாகும். இது மக்கள் தொகையின் அளவு, அமைப்பு மற்றும் பரவல் ஆகியவற்றோடு பிறப்பு, குடிப்பெயர்வு, மூப்படைதல் மற்றும் இறப்பு இவற்றிற்கேற்ப நிகழும் கால இடமாற்றம் ஆகியவற்றைப் பற்றிய படிப்பாகும்.
   அ) மக்களியல் ஆ) புவியியல் இ) மானிடப்புவியியல் ஈ) உயிரினப் புவியியல்

3. இவற்றுள் ஒன்று அதிக மக்களடர்த்திக் கொண்ட பகுதிகள் அல்ல?
   அ) கங்கைப் பள்ளத்தாக்கு, பிரமபுத்திரா பள்ளத்தாக்கு மற்றும் கிழக்கு ஆசியா.
   ஆ) கங்கைப் பள்ளத்தாக்கு, பிரமபுத்திரா பள்ளத்தாக்கு மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் வட கிழக்குப் பகுதிகள்
   இ) சகாரா, கிழக்கு சைபீரியா மற்றும் பட்டகோனியா பகுதி
   ஈ) பிரமபுத்திரா பள்ளத்தாக்கு, ஹவாங்கோ பள்ளத்தாக்கு மற்றும் வடமேற்கு ஐரோப்பா

4. பின்வரும் வாக்கியங்களில் ஒன்று உண்மையல்ல.
   அ) உலகின் மொத்த விளைநிலம் 13.3% மற்றும் ஊட்டச்சத்து அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 325 ஆகும்.
   ஆ) இந்தியாவின் மொத்த விளைநிலம் 48.83 சதவீதம் மற்றும் அதன் ஊட்டச்சத்து அடர்த்தி ஒரு கிலோ மீட்டருக்கு 753 ஆகும்.
   இ) உலகிலேயே மிக அதிக ஊட்டச்சத்து அடர்த்தி (சதுர கிலோ மீட்டருக்கு 998) சிங்கப்பூரில் காணப்படுகிறது.
   ஈ) உலகிலேயே சிங்கப்பூரில் தான் மிக அதிக சதவிகித்த்தில் விளைநிலங்கள் காணப்படுகின்றன.

5. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்துக. குறியீடுகளைப் பயன்படுத்தி விடையளி.

| பட்டியல்-I | | பட்டியல் -I | | | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | நைஜர் | i) | மிகக்குறைந்த கல்வியறிவு விகிதம் | அ) | (iii) | (iv) | (i) | (ii) |
| 2) | சிங்கப்பூர் | ii) | மிக அதிகமான பாலின விகிதம் | ஆ) | (i) | (ii) | (iii) | (iv) |
| 3) | பர்கினோ பாசோ | iii) | மிக அதிக இனப்பெருக்க விகிதம் | இ) | (iv) | (iii) | (ii) | (i) |
| 4) | லாட்வியா | iv) | மிக அதிக ஊட்டச்சத்து விகிதம் | ஈ) | (ii) | (iv) | (i) | (iii) |

6. பின்வரும் வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் சரியான வாக்கியத்தை தேர்ந்தெடு.
   **வாக்கியம்:** உலக மக்கள் தொகை வளர்ச்சி அதிக சதவிகிதத்தில் வளர்ச்சி குன்றிய நாடுகளில் காணப்படுகிறது.
   **காரணம்:** வளர்ச்சி குன்றிய நாடுகள் அதிக பரப்பு விகிதத்தையும் குறைந்த இறப்பு விகிதத்தையும் கொண்டுள்ளன.
   அ) வாக்கியம் சரியே ஆனால் காரணம் தவறு ஆ) வாக்கியம் தவறு ஆனால் காரணம் சரியே
   இ) வாக்கியமும் காரணமும் சரியே ஈ) வாக்கியமும் காரணமும் தவறு

7. அறிவு புலப்பெயர்ச்சி தொடர்பான பின்வரும் வாக்கியங்களைக் கவனமாகக் கருத்தில் கொண்டு கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுக்க.
   வாக்கியம் –I: அறிவு புலப்பெயர்ச்சியைப் பெறும் நாடுகள் மிகவும் தகுதிவாய்ந்த தொழிலாளர்களைப் பெறுகிறது.
   வாக்கியம் –II: கல்வி மற்றும் சுகாதார செலவுகள் இப்பிரிவினரின் சொந்த நாட்டிற்கு திருப்பி செலுத்தப்படுவதில்லை.
   அ) வாக்கியம் I மற்றும் II சரியானவை ஆ) வாக்கியம் I மற்றும் II தவறானது.
   இ) வாக்கியம் I சரியானது. வாக்கியம் II தவறானது ஈ) வாக்கியம் I மற்றும் வாக்கியம் II சரியானது.

8. கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் ஒன்று அதிக மக்கள்தொகைப் பிரச்சனைக்குத் தீர்வல்ல.
   அ) தேசிய மற்றும் உலக அளவில் அதிக மக்கள் தொகைப் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரங்களை பல ஊடகங்கள் மூலம் நடைமுறைப் படுத்துதல் ஆ) ஒற்றைக் குழந்தை – குடும்பங்களை நோக்கமாகக் கொள்வது.
   இ) இதை தேசிய பாதுகாப்பு பிரச்சனையாகக் கருதுதல் ஈ) பெரிய அளவு குடும்பத்தை ஆதரிப்பது

9. வேறுபட்ட ஒன்றை தேர்ந்தெடு.
   அ) மெக்சிகோதான் உலகிலேயே மிக அதிகளவில் குடியேற்றம் செய்த நாடு. 2015 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின்படி 2013 ல் அதிக குடியேற்றம் செய்த நாடு அமெரிக்க ஐக்கிய நாடுகள்.

ஆ) உலகிலேயே மிக அதிக பெண்ணுக்கு ஆண் விகிதாசாரத்தைக் கொண்டள்ள நாடு கத்தார். உலகிலேயே அதிக ஆணுக்குப் பெண் விகிதாச்சாரத்தைக் கொண்டுள்ள நாடு லாட்வியா ஆகும்.

இ) இந்தியாவில் திரிபுரா அதிக அளவு கல்வியறிவு விகிதத்தைக் கொண்டுள்ளது. பீகார் மிகக்குறைந்த கல்வியறிவு விகிதத்தைக் கொண்டுள்ளது.

ஈ) அதிகரிக்கும் வேலைவாய்ப்பின்மை, குற்றம், மற்றும் வன்முறை ஏற்படக்காரணம் குறைந்த மக்கள் தேவையாகும்.

10. பின்வரும் வாக்கியங்களில் மற்ற எல்லாம் சரியானவை ஒன்றைத் தவிர.

அ) உலக மக்கள்தொகையில் இந்தியாவின் மக்கள் தொகை 17.74% சதவிகிதமாகும்.

ஆ) இந்தியாவின் மக்களடர்த்தி சதுர கிலோ மீட்டருக்கு 350 பேர்.

இ) 33.2 சதவிகித மக்கள் நகரவாசிகளாவர்.

ஈ) உலக மக்கள் தொகையில் இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது.

11. அதிக மக்கள் தொகை அடர்த்தி இல்லா பகுதி

அ) இந்தியவில் கங்கை மற்றும் பிரம்மபுத்திரா சமவெளி ஆ) சீனாவில் ஹவாங்—ஹோ சமவெளி

இ) வடமேற்கு ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் சமவெளிகள் ஈ) அமேசான் மற்றும் காங்கோ பகுதிகள்

12. பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

i) வறண்ட அல்லது வழக்கமான வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகளைக் காட்டிலும் போதுமான நீர் உள்ள பகுதிகள் அடர்த்தியான மக்கள் தொகையைக் கொண்டிருக்கின்றன.

ii) இந்தியாவின் வடக்கு சமவெளிகளின் நன்கு நீர் பாசனம் செய்யப்படும் பகுதிகள் குறைந்த மக்கள்தொகை கொண்டவை. அதே சமயம் சஹாராவின் வறட்சிப் பகுதிகள் அடர்த்தியான மக்கள்தொகை கொண்டவை.

அ) i) மட்டும் ஆ) ii) மட்டும் இ) i) மற்றும் ii) ஈ) இரண்டுமில்லை

13. பின்வரும் காரணிகளில் ஒன்று அதிக மக்கள் அடர்த்திக்கு சாதகமாக காணப்படுகிறது.

அ) சிறந்த பொருளாதார நிலை மற்றும் சாதகமான காலநிலை ஆ) வேலையின்மை மற்றும் மத சகிப்புத்தன்மை

இ) மோதல்கள் மற்றும் போர்கள் ஈ) அரசியல் ஸ்திரமின்மை மற்றும் அதிக பணவீக்கம்

14. பின்வருவனவற்றில் ஒன்று மக்கள்தொகைப் பரவலைத் தீர்மானிக்கும் இயற்காரணியாகும்.

அ) சாதகமற்ற காலநிலை ஆ) வேலையின்மை

இ) மத சகிப்பின்மை ஈ) மோதல்கள் மற்றும் போர்கள்

15. பின்வருவனவற்றில் எது தவறான கூற்று?

அ) மக்கள் தொகை அடர்த்தி என்பது ஒரு சதுர கிலோமீட்டரில் வாழும் நபர்களின் எண்ணிக்கை

ஆ) உடலியல் / ஊட்டச்சத்து அடர்த்தி என்பது ஒரு சதுர கிலோமீட்டர் விளை நிலத்தில் வாழும் விவசாயிகளின் எண்ணிக்கையாகும்.

இ) உலக மக்கள் தொகையில் 60% மக்கள் தொகையை பத்து நாடுகள் கொண்டுள்ளன.

ஈ) உலகம் முழுவதும் மக்கள்தொகை பரவல் சீரற்றதாக உள்ளது.

16. பின்வருவனவற்றில் ஒன்று மக்கள்தொகை அதிக அடர்த்தி கொண்ட பகுதி அல்ல.

அ) கிழக்கு ஆசியா ஆ) தெற்கு ஆசியா

இ) அமெரிக்காவின் வடகிழக்கு பகுதி ஈ) கிரீன்லாந்து

17. கீழ்க்கண்டவற்றில் எந்த குறைந்த மக்களடர்த்தி பகுதி தென் அமெரிக்காவில் அமைந்துள்ளது?

அ) கலகாரி ஆ) சகாரா இ) அட்டகாமா ஈ) தார்

18. பின்வருவனவற்றில் ஒரு சதுர கி.மீக்கு சராசரியாக 2 நபர்களின் மக்கள் தொகை அடர்த்தி உள்ள நாடு எது?

அ) ஆஸ்திரேலியா ஆ) பிரேசில் இ) தென்னாப்பிரிக்கா ஈ) ஜெர்மனி

19. கொடுக்கப்பட்டவற்றிலிருந்து தவறான வாக்கியத்தை அடையாளம் காணவும்.

அ) கச்சா பிறப்பு விகிதம் என்பது ஒரு வருடத்தில் ஆயிரம் பேருக்கு உயிருள்ள பிறப்புகளின் எண்ணிக்கை

ஆ) இறப்பு விகிதம் என்பது ஒரு வருடத்தில் பத்தாயிரம் பேருக்கு இறப்பவர்களின் எண்ணிக்கை

இ) நிகர இடம்பெயர்வு விகிதம் $N = 1000 \times (I - E) / P$

ஈ) இயற்கை வளர்ச்சி விகிதம் (RNI) = CBR-CDR (+ / - நிகர இடம்பெயர்வு)

20. தெற்கு சூடானில் 2017 இல் 3.83% மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் என்பது கீழ்க்கண்ட ஒன்றைக் குறிக்கவில்லை

அ) இது உயர் கல்வியறிவு விகிதத்தைக் கொண்டுள்ளது.

ஆ) இது அதிக இளைஞர்களின் விகிதத்தைக் கொண்டுள்ளது.

இ) இது அதிக மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டுள்ளது.

ஈ) இது உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுள்ளது.

21. நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்மனிதர்கள் முதலில் தோன்றிய இடம் என்று மானுடவியலாளர்கள் நம்புவது

அ) யூப்ரடீஸ் மற்றும் டைக்ரிஸ் பள்ளத்தாக்கு ஆ) ஆசியாவின் சிந்து பள்ளத்தாக்கு

இ) கிழக்கு ஆப்பிரிக்காவில் பெரிய பிளவுப் பள்ளத்தாக்கு ஈ) ஆப்பிரிக்காவின் நைல் பள்ளத்தாக்கு

22. 1 மில்லியன் மக்கள் தொகை கொண்ட முதல் நகர்ப்புறக் குடியிருப்பு (மில்லியன் நகரம்)

அ) இலண்டன் ஆ) பாரிஸ் இ) நியூயார்க் ஈ) டோக்கியோ

23. 2050 ல் வளர்ந்து வரும் மற்றும் வளர்ந்த நாடுகளில் நகரமயமாகும் என்று கணிக்கப்பட்ட அளவு

அ) முறையே 74% & 76% ஆ) முறையே 64% & 86%


இ) முறையே 54% & 96% ஈ) முறையே 44% & 66%

24. 2011 ஆம் ஆண்டுக்கணக்கெடுப்பின்படி கீழ்வருவனவற்றுள் எது சரியானது?

அ) டெல்லியின் மக்கள்தொகை 4.1% உயர்ந்தது ஆ) மும்பையின் மக்கள்தொகை 5.1% உயர்ந்தது.

இ) கொல்கத்தாவின் மக்கள்தொகை 4% உயர்ந்தது ஈ) சென்னையின் மக்கள்தொகை 5% உயர்ந்தது.

25. மைய மண்டல கோட்பாடு மாதிரியைப் பொருத்தவரை பின்வருவனவற்றுள் எந்த வாக்கியம் உண்மையானதல்ல? (தவறானது)




அ) இந்த மாதிரி 1825 ல் எர்னஸ்ட்ட பர்கஸ் என்பவரால் கொடுக்கப்பட்டது.

ஆ) படத்தில் E என்னும் எழுத்து குறிப்பது நடுத்தர வகுப்பு குடியிருப்புகள்

இ) ஒரு நகரத்தின் வளர்ச்சியானது மையத்திலிருந்து வெளிநோக்கி சிற்றலைகள் போல் வட்ட வடிவங்களில் அமையும் என்று சிந்தித்தார்.

ஈ) படத்தில் B எனும் எழுத்து மாறும் மண்டலத்தைக் குறிக்கும்.

26. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களை கருத்தில் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

**வாக்கியம் I :** நகர்ப்புற விளிம்பு என்பது நன்கு அறியப்பட்ட நகர்ப்புறப் பயன்பாடுகள் காணப்படும். நிலத்திற்கும், வேளாண்தொழிலுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்திற்குமிடையில் உள்ள மாறுதல் நிகழும் பகுதியாகும்.

**வாக்கியம் II:** நகர்ப்புற விரிவாக்கம் அல்லது புறநகர் விரிவாக்கம் என்பது மத்திய நகர்புறப் பகுதிகளிலிருந்து அடர்த்தி குறைந்த ஒரேயொரு நிலப்பயன்பாடு கொண்ட மற்றும் பொதுவாக மோட்டார்காரை மட்டும் சார்ந்த குழுக்கள் வாழும் பகுதியில் மக்கள்தொகை விரிவாக்கம் நடைபெறுவதை விவரிக்கிறது. இச்செயல்முறை புறநகர் விரிவாக்கம் என்றும் அழைக்கப்படும்.

அ) வாக்கியம் I சரியானது. வாக்யிம் II தவறானது ஆ) வாக்கியம் I தவறானது, வாக்கியம் II சரியானது

இ) வாக்கியம் I மற்றும் II சரியானவை ஈ) வாக்கியம் I மற்றும் II தவறானவை.

27. பட்டியல் I மற்றும் பட்டியல் II ஐப் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்தி விடையளிக்கவும்.

| பட்டியல் -I | பட்டியல் – II | | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|
| 1) நிர்வாக நகரம் | i) பிட்ஸ்பர்க் | அ) | i) | ii) | iii) | iv) |
| 2) பொழுதுபோக்கு நகரம் | ii) பீஜிங் | ஆ) | iii) | iv) | i) | ii) |
| 3) சமய நகரம் | iii) மியாமி | இ) | iv) | iii) | ii) | i) |
| 4) தொழில் நகரம் | iv) ஜெருசலேம் | ஈ) | ii) | iii) | iv) | i) |

28. பின்வரும் வாக்கியங்களில் நகரமயமாதல் பற்றிய தவறான வாக்கியம் எது?

அ) அதிக அளவு வேலையின்மை வீதம் மற்றும் தகுதிக்குக் குறைவான வேலை ஆகியவை குற்ற வீதம் அதிகரிக்கக் காரணங்களாக உள்ளன.

ஆ) நகர்ப்புற இடங்களில் மக்கள் குவிவதால் சமூகவசதிகள் அதிக அழுத்தத்திற்கு உள்ளாகின்றன.

இ) குப்பை சேகரிக்கும் இடங்களின் பற்றாக்குறை கிராம – நகர விளிம்பை ஆர்கானிக் (Organic – கரிம) வளம் மிகுந்ததாகவும் மனித உடல்நலத்திற்கு அதிகம் உகந்ததாகவும் ஆக்குகிறது.

ஈ) இடப்பற்றாக்குறைக் காரணமாக நிலத்தின் விலை அதிகரிப்பதுடன் அலுவலகம் மற்றும் குடியிருப்புகளின் வாடகை அதிகரிக்கிறது.

29. பின்வருவனவற்றுள் எது / எவை நிலையான நகர்ப்புற பகுதியின் பண்புக்கூறு / கூறுகள்?

(i) குறைந்தது 50,000 மக்கள்தொகை கொண்ட முக்கிய நகரமாக இருத்தல் வேண்டும்.

(ii) நகர்ப்புற மற்றும் கிராமப்புற நிர்வாகக் குழுக்களைக் கொண்ட தொடர்பகுதிகள் முக்கிய நகரத்தோடு நெருக்கமான, பரஸ்பர, சமூகப் பொருளாதார தொடர்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(iii) 2 அல்லது 3 பத்தாண்டுகளில் இந்த முழுப்பகுதியும் நகரமயமாகலாம்.

அ) (i), (ii) மற்றும் (iii) ஆ) (i) மற்றும் (iii) இ) (ii) மற்றும் (iii) ஈ) (iii) மட்டும்

30. சிதறிய குடியிருப்பு பற்றிய பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது?

அ) வீடுகள் இடைவெளி விட்டுக் காணப்படும். ஆ) வயல்வெளிகளோடு கலந்திருக்கும்.

இ) சந்தை மற்றும் பிற செயல்பாடுகள் மையப்படுத்தப்பட்டு இருப்பதால் மக்கள் ஒன்று சேர்ந்து பங்கெடுப்பார்கள்.

ஈ) வளமான ஆற்றுப் பள்ளத்தாக்கில் காணப்படுகிறது.

31. கொடுக்கப்பட்டதிலிருந்து சரியான வாக்கியத்தை அடையாளம் காணவும்.

அ) உலகின் மிகப் பெரிய நகரங்களில் பெரும்பாலானவை நதியோரங்களில் அமைந்துள்ளன.

ஆ) குறிப்பாக ஆறுகள் மலையை அடையும் இடத்தில் நகரங்கள் அமைந்துள்ளன.

இ) கடலுக்கு அருகில் உள்ள ஆறுகளின் முகத்துவாரம் பெரும்பாலும் கடல் ஆய்வாளர்கள் தரையிறங்கிய முதல் தலமாகும்.

ஈ) உலர் புள்ளி தலம் என்பது சுற்றியுள்ள பகுதியிலிருந்து சற்று உயர்த்தப்பட்டதாகும்.

32. வெட் பாயிண்ட் தலம் என்பது, வழக்கமாக ஆற்றின் அருகே இருப்பதால், தண்ணீரை அணுகக்கூடிய எந்த தளத்தையும் குறிக்கிறது. பின்வருவனவற்றில் எது வெட் பாயிண்ட் தலம் அல்ல?

அ) பாரிஸ் ஆ) அலகாபாத் இ) லண்டன் ஈ) போபால்

33. கடந்த காலத்தில் நிலத்தோற்றம் பெரும்பாலும் சிறந்த தற்காப்பு வடிவமாக நிரூபிக்கப்பட்டது. பின்வருவனவற்றில் எது பனிப்பாறையின் உச்சியில், தன்னைத் தற்காத்துக் கொள்ள கிட்டத்தட்ட சரியான நிலையில் அமைந்துள்ளது?

அ) எடின்பர்க் கோட்டை ஆ) ஏலி இ) ஷ்ரூஸ்பரி ஈ) டர்ஹாம்

34. தங்கத்தைக் கண்டறிந்ததால் உருவான மிகவும் பிரபலமான குடியேற்றம் சான் பிரான்சிஸ்கோ எங்குள்ளது?

அ) நெதர்லாந்து ஆ) பஹாமாஸ்

இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஈ) ஐக்கிய அரவு எமிரேட்டுகள்

35. பின்வருவனவற்றில் எது சரியாகப் பொருந்தவில்லை?

அ) கார்ட்டும் – நீல நைல் & வெள்ளை நைல் ஆ) அலகாபத் – கங்கா & கோமதி

இ) பவானி – காவிரி & பவானி ஈ) பெல்கிரேட் – சாசா & டான்யூப்

36. நதிக்கரையை ஒட்டி வீடுகள் கட்டப்பட்டால், அவ்வகை குடியேற்றத்தின் வடிவம்

அ) T - வடிவம் ஆ) Y - வடிவம் இ) நட்சத்திர வடிவம் ஈ) நேரியல் வடிவம்

37. ஏரியைச் சுற்றி வீடுகள் கட்டப்பட்டால், அவ்வகை குடியேற்றத்தின் வடிவம்

அ) T - வடிவம் ஆ) வட்ட வடிவம் இ) நட்சத்திர வடிவம் ஈ) நேரியல் வடிவம்

38. நேராகச் செல்லும் சாலை முடிவடைந்து இடம் மற்றும் வலமாகப் பிரிக்கப்பட்டு காணப்பட்டு வீடுகள் அமைந்துள்ள அவ்வகை குடியேற்றத்தின் வடிவம்

அ) T - வடிவம் ஆ) Y - வடிவம் இ) நட்சத்திர வடிவம் ஈ) நேரியல் வடிவம்

39. பின்வருவனவற்றில் தவறான அறிக்கை எது?

அ) இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு, 1991 நகர்ப்புற குடியிருப்புகளை "நகராட்சி, மாநகராட்சி, கண்டோன்மெண்ட் போர்டு அல்லது அறிவிக்கப்பட்ட நகரப் பகுதிக் குழுவைக் கொண்ட அனைத்து இடங்களும்" என வரையறுக்கிறது.

ஆ) அவர்கள் குறைந்தபட்சம் 5000 நபர்களைக் கொண்டுள்ளனர்.

இ) ஆண் தொழிலாளர்களில் குறைந்தது 55 சதவீதம் பேர் விவசாயம் அல்லாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுளளனர்.

ஈ) ஒரு சதுர கி.மீ.க்கு குறைந்தபட்சம் 400 நபர்களின் மக்கள் தொகை அடர்த்தி கொண்டது நகர்ப்புற குடியிருப்புகள்

40. உலகின் முதல் மில்லியன் நகரமாக லண்டன் உருவான ஆண்டு

அ) 1810 கி.பி ஆ) 1910 கி.பி இ) 1710 கி.பி ஈ) 1016 கி.பி

41. புதுப்பிக்கக்கூடிய வளங்கள் பற்றிய தவறான வாக்கியத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) இவ்வளங்கள் பயன்படுத்திய பிறகு மீண்டும் கிடைக்கும்.

ஆ) இவ்வளங்களை இயற்கையிலேயே மீண்டும் உற்பத்தி செயல்படுத்துவதால் தீர்ந்து போகாதவையாகும்.

இ) காற்று, நீர், சூரிய ஆற்றல் போன்றவை புதுப்பிக்கக்கூடிய வளங்களுக்கு உதாரணங்கள் ஆகும்.

ஈ) குறிப்பிட்ட அளவே உள்ளதால் ஒரு முறை பயன்படுத்திவிட்டால் மீண்டும் பெற முடியாது.

42. கனிமங்களைப் பற்றிய உண்மையல்லாத வாக்கியத்தை அடையாளம் காண்க.

அ) கனிமங்கள், பொதுவாக தீப்பாறைகள் மற்றும் உருமாறிய பாறைகளின் விரிசல்கள், பிளவுகள், வெடிப்புகள் மற்றும் இணைப்புகளில் காணப்படுகின்றன.

ஆ) பாறை இணைப்புகளில் காணப்படும் சிறிய அளவிலான கனிமங்கள் இழை (Vein) என அழைக்கப்படுகின்றன.

இ) பாறை இணைப்புகளில் காணப்படும் பெரிய அளவிலான கனிமங்க்கள் சுமை என அழைக்கப்படுகின்றன.

ஈ) சிதைவடைந்த பாறைத்துகள்கள் நீரால் அடித்துச் செல்லப்படும் பொழுது கரையக்கூடிய துகள்கள் அகற்றப்பட்டும கரையாத துகள்களை கரையக்கூடிய துகள்கள் அகற்றப்பட்டும் கரையாத துகள்களை விட்டுச் செல்லும் இவ்வகையில் தோன்றுவதைச் சிதைவடைந்த எஞ்சிய துகள்கள் என்று அழைக்கப்படுகின்றன.

43. பின்வரும் வாக்கியங்களை கவனித்து அதில் சரியானவற்றை தேர்ந்தெடுக்கவும்.

i) ஆஸ்திரேலியா, பிரேசில், ரஷ்யா, சீனா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், உக்ரைன், கனடா போன்ற நாடுகளில் நல்ல தரமான இரும்புத்தாது காணப்படுகிறது.

ii) உலகின் நிரூபிக்கப்பட்ட இரும்பு வைப்பில் ரஷ்யா மூன்றாவதாக உள்ளது.

iii) உலகின் மிகப்பெரிய இரும்புத்தாது உற்பத்தியாளர் ஆஸ்திரேலியா ஆகும்.

iv) மிக அதிக அளவிலான (84%) இரும்புத்தாதுவை 10 நாடுகள் மட்டுமே உற்பத்தி செய்கிறது.

அ) i) மற்றும் ii) மட்டும் ஆ) i) மற்றும் iii) மட்டும் இ) iii) மற்றும் iv) மட்டும் ஈ) ii) மற்றும் iv) மட்டும்

44. கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்று எது?
அ) உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தியாளர் சவுதி அரேபியா
ஆ) உலகின் இரண்டாவது மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தியாளர் ரஷ்யா
இ) உலகின் நான்காவது மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தியாளர் இந்தியா.
ஈ) உலக எண்ணெய் இருப்பில் 60% ஐ மத்திய கிழக்கு நாடுகள் கொண்டுள்ளன.

45. கீழ்க்கண்டவற்றில் தவறான வாக்கியத்தை அடையாளம் காண்க.
அ) பீட் மரங்கள் நிலக்கரியாக மாறுவதன் முதல் நிலை மரக்கரி ஆகும். இதில் 30% முதல் 35% மட்டுமே கார்பன் உள்ளது.
ஆ) லிக்னைட் அல்லது பழுப்பு நிலக்கரி தரம் குறைந்த நிலக்கரி ஆகும். இதில் 25% முதல் 45% வரை கார்பன் உள்ளது.
இ) பிட்டுமினஸ் அல்லது கற்கரி நிலக்கரி வணிக ரீதியிலான பயன்பாட்டில் மிகவும் குறைவான நிலக்கரி ஆகும்.
ஈ) ஆந்த்ரசைட் நிலக்கரி மிகக் கடினமானது. ஆனால் மிகவும் அதிகமான புகையை வெளிப்படுத்துவதோடு மிக்குறைந்த அளவு சாம்பலைக் கொண்டுள்ளது.

46. பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு சரியானதைத் தேர்வு செய்யவும்.
கூற்று (A): சிறந்த பால்வளப் பகுதிகள் குளிர்ந்த மிதமான பகுதியின் ஈரமான பகுதிகளில் அமைந்துள்ளன.
காரணம் (R): குளிர்ந்த மிதமான பகுதிகளில் சத்தான புல் உள்ளது மற்றும் பால் பொருட்களுக்கு அதிக தேவை உள்ளது.
அ) A மற்றும் B இரண்டும் சரியானவை. ஆனால் R என்பது A ன் சரியான விளக்கம் அல்ல.
ஆ) A மற்றும் B இரண்டும் சரி ஆனால் R என்பது A இன் சரியான விளக்கம்.
இ) A உண்மை ஆனால் R என்பது தவறு ஈ) R உண்மை ஆனால் A தவறானது.

47. 18 டிரில்லியன் டாலர்களுடன், இது உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாகும்.
அ) சீனா ஆ) அமெரிக்கா இ) ரஷ்யா ஈ) பிரான்ஸ்

48. பின்வருவனவற்றுள் தவறான வாக்கியங்கள் எவை?
i) நீர் மின்சாரம் ஒரு மாசற்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் ஆகும்.
ii) இது புவியின் மின் உற்பத்தியில் கிட்டத்தட்ட 15% ஐ வழங்குகிறது.
iii) சீனா மிகப்பெரிய நீர்மின் ஆற்றலைக் கொண்ட நாடு அதைத் தொடாந்து பிரேசில், இந்தோனேசியா, கனடா மற்றும் சையர் உள்ளன.
iv) உலகின் மிகப்பெரிய நீர் மின்சாரம் உற்பத்தி செய்யும் நாடு கனடா அதைத் தொடர்ந்து சீனா உள்ளது.
அ) i, ii, மற்றும் iii மட்டும் ஆ) ii, iii மற்றும் iv மட்டும் இ) ii மற்றும் iv மட்டும் ஈ) i மற்றும் ii மட்டும்

49. பின்வருவனவற்றுள் எவை கனிமங்களை பாதுகாக்கும் ஒரு வழிமுறை அல்ல?
அ) மக்கள்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்துவதன் மூலம் கனிமங்களின் தேவையைக் குறைத்தல்.
ஆ) கனிம வளங்களைப் பாதுகாக்க சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
இ) கனிமங்களை மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாட்டிற்கு உட்படுத்துதல்.
ஈ) அத்தியாவசியமற்ற கனிமங்களின் பயன்பாட்டை ஊக்கப்படுத்துதல்.

50. வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடுக.
அ) குறைந்த உறையிட்ட பொருட்களைத் தேர்ந்தெடுத்தல்.
ஆ) மறுசுழற்சி அல்லது மறுபயன்பாடு கொண்ட பொருட்களைத் தேர்ந்தெடுத்தல்.
இ) பொருட்களை வாங்குவதற்கு பைகள் அல்லது பொருட்களைப் பயன்படுத்தாமல் நெகிழியைப் பயன்படுத்துதல்.
ஈ) தேவையற்ற நெகிழிப் பைகள் மற்றும் உறையிட்ட பொருட்களை தவிர்த்தல்

51. பின்வருவனவற்றில் எது தவறாகப் பொருந்தியுள்ளது?
அ) தீர்ந்து போகும் வளங்கள் – நிலக்கரி
ஆ) அஜியோடிக் வளங்கள் – தாவரம்
இ) எங்கும் நிறைந்த வளங்கள் – காற்று
ஈ) புதுப்பிக்கத்தக்க வளங்கள் – நீர்

52. கொடுக்கப்பட்டதிலிருந்து சரியான அறிக்கையை அடையாளம் காணவும்.
அ) ஒரு உயிரினத்திலிருந்து ஒரு வளம் உருவாகும்போது, அந்த வளமானது அஜியோடிக் வளம் என்று அழைக்கப்படுகிறது.
ஆ) சாத்தியமான ஆதாரங்கள் உள்ளன என்று அறியப்பட்டவை மற்றும் எதிர்காலத்தில் பயன்படுத்தப்படலாம்.
இ) வளர்ந்த வளங்கள் என்பது ஆய்வு செய்யப்பட்டு, அவற்றின் தரம் மற்றும் அளவு ஆகியவை பயன்பாட்டிற்காக தீர்மானிக்கப்பட்டவை.
ஈ) குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே குவிந்துள்ள வளங்கள் உள்ளூர்மயமாக்கப்பட்ட வளங்கள் எனப்படும்.

53. மனித வளர்ச்சியின் நிலைகளில் ஒன்று இதனால் பெயரிடப்பட்டது?
அ) தங்கம் ஆ) வைரம் இ) செம்பு ஈ) நிலக்கரி

54. பின்வருவனவற்றில எது சிவப்பு நிறத்தில் 72% தூய இரும்பு கொண்டுள்ளது?
அ) ஹெமாடைட் ஆ) மேக்னடைட் இ) லிமோனைட் ஈ) சைடரைட்

55. உலகில் இரும்புத் தாதுவை அதிகம் உற்பத்தி செய்யும் நாடு எது?
அ) அமெரிக்கா ஆ) கனடா இ) ஆஸ்திரேலியா ஈ) இந்தியா

56. ஜெர்மனியில் அமைந்துள்ள இரும்புத் தாது வயல்
அ) இடாபிரா ஆ) கிரிவோய் ரோக் இ) ரூர் பள்ளத்தாக்கு ஈ) மவுண்ட் புரூஸ்

57. சிறப்புத் தரமான எஃகு தயாரிக்கப் பயன்படும் ஒரு வகையான ஃபெரா–அலாய் மற்றும் உற்பத்திச் செயல்பாட்டில் சுத்தப்படுத்தியாகச் செயல்படுவது எது?
அ) செம்பு ஆ) நிலக்கரி இ) மாங்கனீசு ஈ) பாக்சைட்

58. உலகில் மாங்கனீசு தாதுவை அதிகம் உற்பத்தி செய்யும் நாடு எது?
அ) ஆஸ்திரேலியா ஆ) ரஷ்யா இ) தென்னாப்பிரிக்கா ஈ) அமெரிக்கா

59. உலகில் எந்த நாட்டில் மாங்கனீசு அதிக அளவில் இருப்பு உள்ளது?
அ) ரஷ்யா ஆ) ஆஸ்திரேலியா இ) இந்தியா ஈ) சீனா

60. இது இரும்பு அல்லாத, மென்மையான பழுப்பு உலோகம். இது ஒரு நல்ல மின்கடத்தி, அதிக பளபளப்பு, அடர்த்தி மற்றும் உருகும் புள்ளியுடையது. இது அதன் தூய நிலையில் சொந்த உலோகம், ஆக்சைடுகள் மற்றும் சல்பைடு என மூன்று வடிவங்களில் நிகழ்கிறது. பெயரிடு.
அ) பாக்சைட் ஆ) இரும்பு தாது இ) மாங்கனீசு ஈ) செம்பு


61. விட்டி கல்ச்சர் அல்லது திராட்சை சாகுபடி சிறப்பாக நடைபெறும் இடம்
அ) பாம்பாஸ் பகுதி ஆ) சவானா பகுதி இ) சகாரா பகுதி ஈ) மத்திய தரைக்கடல் பகுதி

62. பின்வருவனவற்றுள் எது வளர்ச்சியடைந்த நாடுகளை உள்ளடக்கியது?
அ) ஆஸ்திரேலியா, கென்யா, பாகிஸ்தான், ஜெர்மனி மற்றும் இத்தாலி
ஆ) ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலி
இ) ஆஸ்திரேலியா, இலங்கை, தாய்லாந்து, ஜெர்மனி மற்றும் இத்தாலி
ஈ) பாகிஸ்தான், இலங்கை, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலி.

63. இவற்றில் எது தவறாக பொருந்தியுள்ளது?

| | பழங்குடியினர் | | பகுதி |
|---|---|---|---|
| அ) | இன்யூட்கள் | – | ஆர்டிக் பகுதி |
| ஆ) | பிக்மிக்கள் | – | கலகாரி பகுதி |
| இ) | அபாரிஜின்ஸ் | – | தென் அமெரிக்க பகுதி |
| ஈ) | பாலியன் | – | தென் இந்தியப் பகுதி |

64. வான்தூனனின் வேளாண் மாதிரியின்படி நகரப்புற மையத்திலிருந்து வெளிப்புறம் நோக்கி அமைந்துள்ள 4 வளைய வரிசை அமைப்புகள்



அ) தானியங்கள் மற்றும் பயிர்நிலங்கள், சந்தை, காடுகள், பால்பண்ணை மற்றும் மேய்ச்சல்
ஆ) காடுகள், சந்தை, தானியங்கள் மற்றும் பயிர் நிலங்கள், பால்பண்யை மற்றும் மேய்ச்சல்
இ) சந்தை, பால்பண்ணை, காடுகள், தானியங்கள் மற்றும் பயிர்நிலங்கள் மேய்ச்சல்
ஈ) மேய்ச்சல், சந்தை, காடுகள், தானியங்கள் மற்றும் பயிர்நிலங்கள் மற்றும் பால்பாண்ணை


65. பின்வருவனவற்றில் எது மிகவும் பின்தங்கிய நாடுகளின் பண்பு அல்ல?
அ) குறைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆ) அதிக எழுத்தறிவு விகிதம்
இ) சமமற்ற வருவாய் பரவல் ஈ) அதிக அளவிலான வேலையின்மை

66. பின்வரும் கூற்றுகளில் ஒன்று மட்டும் வான்தூனனின் வேளாண் மாதிரியின் அனுமானம் அல்ல.
அ) இது தனித்த ஆக்கிரமிப்பற்ற காடுகளால் சூழப்பட்டு காணப்படுகின்றது.
ஆ) இந்த நிலப்பகுதி முழுவதும் ஆறுகளாலோ, மலைகளாலோ குறுக்கிடாத சமமான புவிப்பரப்பை கொண்டுள்ளது.
இ) இப்பகுதி முழுவதும் மண்ணின் தன்மையும் காலநிலையும் சீரற்ற காணப்படுகிறது.
ஈ) விவசாயிகள் அதிகபட்ச லாபத்திற்காக செயல்படுகிறார்கள்.

67. தவறாக பொருந்தியுள்ளதைக் கண்டறிக.
அ) கனரக தொழிற்சாலை – இரும்பு எஃகு தொழிற்சாலை
ஆ) இலகு ரக தொழிற்சாலை – தையல் இயந்திர தொழிற்சாலை
இ) தனியார் தொழிற்சாலை – பிலாய் எஃகு தொழிற்சாலை
ஈ) பொதுத்துறை தொழிற்சாலை – பாரத் கனரக மின்சாத நிறுவனம்

68. பின்வருவனவற்றில் எது வளர்ந்த நாடுகளின் பண்பு அல்ல?
அ) தனிநபர் வருமானம் குறைவு ஆ) சிறந்த வாழ்க்கைத் தரம் மற்றும் வீட்டுவசதி
இ) அதிகமான மொத்த உள்நாட்டு உற்பத்தி ஈ) மேம்பட்ட அடிப்படை வசதிகளும், தொழில் நுட்பங்களும்

69. பினவரும் வரைபடத்தில் எது லாபகரமான தொழிலக அமைவிடம்?



70. கீழ்கண்டவற்றுள் எது தோட்டப்பயிர் அல்ல?

அ) தேயிலை ஆ) காப்பி இ) சோளம் ஈ) கோகோ

71. தவறாகப் பொருந்திய ஒன்றைக் கண்டறியவும்.

| பொருளாதார நடவடிக்கை | | தொழிலாளார் பெயர் |
|---|---|---|
| அ) முதல் நிலை | – | சிவப்பு கழுத்துப் பட்டை |
| ஆ) இரண்டாம் நிலை | – | பச்சை கழுத்துப் பட்டை |
| இ) மூன்றாம் நிலை | – | இளஞ்சிவப்பு கழுத்துப் பட்டை |
| ஈ) நான்காம் நிலை | – | வெள்ளை கழுத்துப் பட்டை |

72. மலேசியாவில் இடம்பெயர்தல் சாகுபடி ------ என்று அழைக்கப்படுகிறது.

அ) ஜும்மிங் ஆ) லடாங் இ) செங்கின் ஈ) மில்பா

73. இது ஒரு விவசாய அமைப்பாகும். இதில் ஒரு விவசாயி வெவ்வேறு விவசாயத்தை ஒரே நிலத்தில் ஒன்றாக செய்கிறார்.

அ) தீவிர விவசாயம் ஆ) விரிவான விவசாயம் இ) கலப்பு விவசாயம் ஈ) இயற்கை விவசாயம்

74. எது சரியாகப் பொருந்தும்?

அ) பொமோலஜி – பூக்களை வளாப்பது பற்றிய ஆய்வு ஆ) ஒலரிகல்ச்சர் – காய்கறி வளர்ப்பின் அறிவியல்

இ) புளோரி கல்ச்சர் – வளரும் பழங்களைக் குறிக்கிறது

ஈ) பட்டு வளர்ப்பு – திராட்சை சாகுபடியைக் குறிக்கிறது.

75. இது "டிரக் விவசாயம்" என்றும் அழைக்கப்படுகிறது.

அ) தோட்ட விவசாயம் ஆ) தோட்டக்கலை இ) திராட்சை வளர்ப்பு ஈ) பட்டுவளர்ப்பு

76. "தனித்த நிலம்" என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

அ) அலெக்சாண்டர் வான் ஹம்போல்ட் ஆ) வான் தூனன்

இ) அஃப்ரெட் வெஜெனர் ஈ) கார்ல் ரிட்டர்

77. வான தூனன் மாதிரியில், மத்தில் நகரத்தைச் சுற்றியுள்ள -------- இல் பண்ணை வளர்ப்பு அமைந்துள்ளது.

அ) முதல் வளையம் ஆ) இறுதி வளையம் இ) இரண்டாவது வளையம் ஈ) மூன்றாவது வளையம்

78. பின்வருவனவற்றில் எது "மதிப்பு கூட்டல் துறை" என்றும் அழைக்கப்படுகிறது?

அ) முதன்மை தொழில் ஆ) இரண்டாம் நிலை தொழில்

இ) மூன்றாம் நிலை தொழில் ஈ) நான்காம் நிலை தொழில்

79. பின்வருவனவற்றில் ஒன்று மூன்றாம் நிலை தொணில் அல்ல.

அ) வர்த்தகம் ஆ) போக்குவரத்து இ) விவசாயம் ஈ) தொலை தொடர்பு

80. இத்தொழிலில் உள்ளவர்கள் உயர் பதவிகள் மற்றும் அதிகாரங்களுடன் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்த தொழில் பிரிவில் உள்ள இவர்கள் முக்கியமான எடுப்பவர்கள்.

அ) முதன்மை தொழில் ஆ) இரண்டாம் நிலை தொழில்

இ) நான்காம் நிலை தொழில் ஈ) ஐந்தாம் நிலை தொழில்

81. கீழே கொடுக்கப்பட்ட வாக்கியத்தில் உண்மையானது எது?

அ) இந்தியா உலகின் மிக அதிகமான மொழிகளைக் கொண்டுள்ளது.

ஆ) சீனா மற்றும் ரஷ்யாவிற்கு அடுத்து, இந்தியா உலகின் மூன்றாவது மிக அதிகமான மொழிகளைக் கொண்டுள்ளது.

இ) பப்புவா நியூ கினியாவுக்கு அடுத்து, இந்தியா உலகின் இரண்டாவது மிக அதிகமான மொழிகளைக் கொண்டுள்ள நாடாகும்.

ஈ) இந்தியா மற்றும் இங்கிலாந்து முறையே உலகின் மூன்று மற்றும் நான்காவது அதிக மொழிகளைக் கொண்டுள்ளன.

82. பின்வருபவனவற்றில் பாரம்பரிய கலாச்சார பகுதிகள் பற்றிய தவறான கருத்து எது?

அ) மேற்கு ஐரோப்பிய கலாச்சாராம் தொழில்துறை மிகுந்த மற்றும் நகர்ப்புற கலாச்சாரமாகும்.

ஆ) இஸ்லாம் ஒரு முக்கிய செல்வாக்கை பெற்றுள்ள ஒன்றாக இருக்கும் வேளையில் கண்ட ஐரோப்பிய கலாச்சாரம் பல்வேறு அரசியல் மற்றும் பொருளதார சிந்தனைகளால் பாதிக்கப்படுகிறது.

இ) மத்திய தரைக்கடல் ஐரோப்பாவை உள்ளடக்கிய நாடுகள் ஆல்ப்ஸ் மலைக்கு தெற்கே அமைந்துள்ளது. இது கிறிஸ்துவ ஆதிக்கம் கொண்ட பகுதியாகும்.

ஈ) ஆங்கிலோ–அமெரிக்கன் மற்றும் ஆஸ்திரேலிய கலாச்சார பகுதிகள் நடைமுறையில் மேற்கு ஐரோப்பிய கலாச்சாரத்தின் குழந்தைகள் எனலாம்.

83. ஒவ்வொரு ------ ஒரு மொழி இறப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அ) 14 நிமிடங்களில் ஆ) 14 நிமிடங்களில் இ) 14 மாதங்களில் ஈ) 14 ஆண்டுகளில்

84. யுனெஸ்கோவின் கருத்துப்படி ஆபத்தான மொழிகளின் ஐந்து நிலைகளில் குழந்தைகள் பேசாத நிச்சயமாக ஆபத்து நிலையில் உள்ள மொழிகளின் எண்ணிக்கை ------

அ) 457 மொழிகள் ஆ) 970 மொழிகள் இ) 646 மொழிகள் ஈ) 374 மொழிகள்

85. பின்வரும் கூற்றை கூறியவர் யார்?
கிழக்கு ஐரோப்பாவை ஆட்சி செய்பவர்கள் மைய நிலப்பகுதியை ஆள்வார்கள். உலகத் தீவிற்கு கட்டளையிடும் மைய நிலப்பகுதியை ஆட்சி செய்பவர்கள் உலகத்தீவை ஆள்வார்கள். உலகத்தீவை ஆட்சி செய்பவர்கள் உலகை ஆள்வார்கள்.

அ) ஹம்போல்ட் ஆ) ஹட்டன் இ) ஸ்பைக்மேன் ஈ) மெக்கிண்டர்

86. எந்த நாடு அதிக எண்ணிக்கையிலான அண்டை நாடுகளுடன் எல்லைகளைக் கொண்டுள்ளது?

அ) சீனா ஆ) கனடா இ) ரஷ்யா ஈ) இந்தியா

87. பின்வருவனவற்றில் தப்பிய (எஞ்சிய) எல்லைக்கோட்டிற்கும் உதாரணம் யாது?

அ) பெர்சியா மற்றும் கிழக்கு, மேற்கு ஜெர்மனி இடையே உள்ள எல்லை
ஆ) பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீர் பகுதி
இ) வட ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் எல்லைகள்
ஈ) ஐரோப்பிய நாடுகள்

88. மைய நிலக் கோட்பாட்டை வெளியிட்டவர் யார்?

அ) ஹம்போல்ட் ஆ) ஹட்டன் இ) ஸ்பைக்மேன் ஈ) மெக்கிண்டர்

89. பின்வருபவற்றின் அனைத்தும் மெக்கிண்டரின் மைய நிலக் கோட்பாட்டை ஆதரிக்கின்றன. ஒன்றைத் தவிர

அ) வட கடல், நார்வே கடல், பாரன் கடல், காரா கடல், லாப்டேவ் கடல், கிழக்கு சைபீரியன் கடல் ஆகியவை ஆண்டு முழுவதும் உறைந்து போயிருப்பதால் மைய நிலப்பகுதியை மேலிருந்து அணுக முடியாது.
ஆ) மத்திய கிழக்கு பாலைவனம், ஈரானிய பீடபூமி, இமயமலை, திபெத் பீடபூமி மற்றும் சைபீரியன் மலைகள் ஆகியவற்றின் காரணமாக மைய நிலப்பகுதியை கீழிருந்து அணுகமுடியாது.
இ) கிழக்கு ஐரோப்பாதான் மைய நிலப்பகுதிக்கு ஒரே நுழைவுவாயில்.
ஈ) இது எந்தவொரு பக்கத்திலும் இருந்தும் மைய நிலப்பகுதி தாக்கப்படும் வகையில் பலவீனமாக இருக்கிறது.

90. எது சரியாக பொருந்தியுள்ளது.

அ) ஆஸ்ட்ரிக் – முண்டா, மான் கிமர்
ஆ) சீன – ஹிந்தி, உருது, சமஸ்கிருதம்
இ) இந்தோ – ஆரியன்–திபெத்தியன்–போடா, கரேன், மணிப்பூரி போன்றவை
ஈ) திராவிட – சமஸ்கிருதம், கரேன், மணிப்பூரி முதலியன.

91. சுமார் மூன்று சதுர கி.மீ. மட்டுமே உள்ளடக்கிய கலாச்சாரப் பகுதி

அ) இந்திய கலாச்சாரம்
ஆ) ஸ்பானிஷ் ஹார்லெம் கலாச்சாரம்
இ) நீக்ரோ கலாச்சாரம்
ஈ) லத்தீன் அமெரிக்க கலாச்சாரம்

92. மிகவும் தொழில்மயமாக்கப்பட்ட மற்றும் நகரமயமாக்கப்பட்ட கலாச்சாரம் எது?

அ) மேற்கு ஐரோப்பிய கலாச்சாரம்
ஆ) தென் கிழக்கு ஆசிய கலாச்சாரம்
இ) லத்தீன் அமெரிக்க கலாச்சாரம்
ஈ) இந்திய கலாச்சாரம்

93. ஐரோப்பாவிற்குள் ஆல்ப்ஸின் தெற்கே அமைந்துள்ள கலாச்சாரம்

அ) மத்திய தரைக்கடல் ஐரோப்பா கலாச்சாரம்
ஆ) ஆங்கிலோ – அமெரிக்க கலாச்சாரம்
இ) லத்தீன் அமெரிக்க கலாச்சாரம்
ஈ) இந்திய கலாச்சாரம்

94. மேற்கில் மொராக்கோ முதல் கிழக்கில் பாகிஸ்தான் வரை பரந்த புவியியல் பகுதியை உள்ளடக்கிய கலாச்சாரம் எது?

அ) இந்திய கலாச்சாரம்
ஆ) இஸ்லாமிய கலாச்சாரம்
இ) தென்கிழக்கு ஆசிய கலாச்சாரம்
ஈ) ஆங்கிலோ – அமெரிக்க கலாச்சாரம்

95. இந்த கலாச்சாரம் அடிப்படையில் வட்டார மாற்றங்களுடன் காணப்படும் ஒரு பௌத்த கலாச்சாரம்

அ) தென்கிழக்கு ஆசிய கலாச்சாரம்
ஆ) கிழக்கு ஆசிய கலாச்சாரம்
இ) இந்திய கலாச்சாரம்
ஈ) ஆங்கிலோ – அமெரிக்க கலாச்சாரம்

96. பின்வருவனவற்றுள் எது உலகின் மனித இனத்தை வகைப்படுத்துவதற்கான அளவுகோல் அல்ல.

அ) தலை வடிவம் ஆ) முக வடிவம் இ) நாடித்துடிப்பு வடிவம் ஈ) முடி வகை

97. பூர்வீக அமெரிக்கர்கள் (செவ்விந்தியர்கள்) மற்றும் எஸ்கிமோக்கள் இதில் உட்படுகின்றனர்?

அ) மங்கோலாய்டு ஆ) நீக்ராய்டு இ) காகசாய்டு ஈ) ஆஸ்ட்ராலய்டு

98. பப்புவா நியூ கினியாவில் எந்த இனம் அதிக ஆதிக்கம் செலுத்துகிறது?

அ) மங்கோலாய்டு ஆ) நீக்ராய்டு இ) காகசாய்டு ஈ) ஆஸ்ட்ராலய்டு

99. Rh(D) இரத்தக் குழுவை எந்த இனம் அதிகமாக கொண்டுள்ளது?

அ) மங்கோலாய்டு ஆ) நீக்ராய்டு இ) காகசாய்டு ஈ) ஆஸ்ட்ராலாய்டு

100. உலகிலேயே மிக அதிக மொழிகள் பேசப்படும் நாடு எது?

அ) இந்தியா ஆ) பப்புவா நியூ கினி இ) சீனா ஈ) ரஷ்யா